بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 23/09/2022 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு - தொடர் 34**
அன்னாருக்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது இருந்த அன்பு மற்றும் நேசத்தின் நிகரற்ற, ஈமானுக்கு வலுவூட்டும் சம்பவங்கள் பற்றிய குறிப்பு

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾

اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்களது நற்குணங்கள் பற்றி எடுத்துக் கூறப்பட்டு வந்தது. இன்றும் இது தொடரும். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள்

اَلَّذِیۡنَ اسۡتَجَابُوۡا لِلّٰہِ وَ الرَّسُوۡلِ مِنۡۢ بَعۡدِ مَاۤ اَصَابَہُمُ الۡقَرۡحُ ؕۛ لِلَّذِیۡنَ اَحۡسَنُوۡا مِنۡہُمۡ وَ اتَّقَوۡا اَجۡرٌ عَظِیۡمٌ

பொருள்: ‘தங்களுக்குக் காயம் ஏற்பட்ட பிறகு(ம்) அல்லாஹ்வினுடையதும், தூதருடையதுமான கட்டளையினை ஏற்றுக் கொண்டவர்களுள் தங்கள் கடமையினை நன்முறையில் நிறைவேற்றியவர்களுக்கும், இறையச்சத்தை மேற்கொண்டவர்களுக்கும் பெரும் கூலி உண்டு.’

என்ற இந்த (3:173) வசனத்தைச் சான்றாகக் கொண்டு தமது சகோதரியின் மகன் உர்வாவிடம், ‘ஹஸ்ரத் ஸுபைர் மற்றும் ஹஸ்ரத் அபூபக்ர் ஆகியோர் அம்மக்களைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள். உஹது தினத்தன்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குத் துன்பம் ஏற்பட்ட போது, மேலும், இணை வைப்பவர்கள் சென்று விட்ட பிறகு, அன்னார் இணை வைப்பவர்கள் திரும்பி வரும் வாய்ப்பு இருக்கிறது என்பதனால், அவர்களுக்குப் பின்னால் யார் செல்வார்கள் என்று கேட்டார்கள். அப்போது எழுபது நபர்கள் தங்களை சமர்ப்பித்தார்கள். அவர்களுள் ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஆகியோரும் அடங்குவர்’ என்று கூறினார்கள்.

அபூ ஸுஃப்யான் உஹது போருக்குப் பிறகு, அடுத்த வருடம் பத்ர் மைதானத்தில் போருக்கான வாக்குறுதி வழங்கிவிட்டு, தமது படையை அழைத்துக் கொண்டு மக்காவை நோக்கி புறப்பட்டார்.

**ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது ஸாஹிப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மேற்கொண்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஆகியோர் உட்பட 70 சஹாபிகளைக் கொண்ட ஒரு குழுவை குரைஷிய படைக்கு பின்னால் அனுப்பி வைத்தார்கள். புகாரியின் ஓர் அறிவிப்பு இவ்வாறு வருகிறது: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸஅது பின் வ(க்)காஸ் (ரலி) அவர்களை குரைஷிய படைக்குப் பின்னால் தகவலை

அறிந்து வருவதற்காக அனுப்பி வைத்தார்கள். மேலும், 'குரைஷியர்கள் ஒட்டகங்களில் பயணித்து, குதிரைகள் காலியாக இருக்கின்றன என்றால், அவர்கள் மக்காவுக்குத் திரும்பி செல்கிறார்கள் என்று புரிந்து கொள்ளுங்கள். ஒருவேளை அவர்கள் குதிரைகளில் பயணிக்கிறார்கள் என்றால், நல்ல எண்ணம் இல்லை என்று புரிந்து கொள்ளுங்கள். அவர்கள் மதீனாவை நோக்கி திரும்பி உள்ளார்கள் என்றால், உடனடியாக எனக்குத் தகவலை தெரிவியுங்கள்' என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், 'இப்போது குரைஷியர்கள் மதீனா மீது தாக்குதல் தொடுத்தால், இறைவன் மீது ஆணையாக! நாம் அவர்களுக்குப் பாடம் புகட்டுவோம்' என்று கூறினார்கள். ஆனால், குரைஷிய படை மக்காவை நோக்கித் திரும்பிச் செல்கிறது என்ற தகவல் அன்னாருக்குக் கிடைத்தது.

ஹுதைபியா சமாதான உடன்படிக்கையின் நிபந்தனைகளுக்கு ஏற்ப, அபூ ஜுந்தலை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் திருப்பி அனுப்பியதும் சஹாபிகள் மிகவும் உணர்ச்சிவசப்பட்டிருந்தார்கள். அந்த சம்பவத்தைப் பற்றி **ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்களும்** கூறியுள்ளார்கள். அன்னார் **கூறுகிறார்கள்:**

ஒருமுறை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் சஹாபிகளைப் பார்த்துக் கூறினார்கள்: நான் உங்களுக்கு அதிகம் கட்டளையிட்டுள்ளேன். ஆனால், நான் உங்களுள் உளத்தூய்மையுள்ள மக்களுக்குள்ளும் சில முறை மறுப்பின் ஆன்மாவைக் கண்டிருக்கிறேன். ஆனால், அபூபக்ர் அவர்களிடம் நான் இந்த ஆன்மாவை ஒருபோதும் கண்டதில்லை. ஆக, ஹுதைபியா உடன்படிக்கையின் போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் போன்ற மனிதரும் பதற்றமடைந்தார்கள். அவர்கள் அதே பதற்றமடைந்த நிலையில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் சென்றார்கள்.

மேலும், 'நாம் உம்ரா செய்வோம் என்று நமக்கு இறைவன் வாக்குறுதி அளிக்கவில்லையா?' என்று கேட்டார்கள். அதற்கு அன்னார், 'ஆம்! இறைவன் வாக்குறுதியளித்திருந்தான்' என்று கூறினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், 'இறைவன் நமக்கு உதவியும் ஆதரவும் புரிவான் என்று நமக்கு இறைவன் வாக்குறுதி அளிக்கவில்லையா?' என்று கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், 'ஆம்! வாக்குறுதி அளித்திருந்தான்' என்று கூறினார்கள். பிறகு, 'நாம் உம்ரா செய்தோமா?' என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கேட்டார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், 'உமரே! நாம் இந்த வருடமே உம்ரா செய்வோம் என்று இறைவன் எப்போது கூறினான்?' என்று கேட்டார்கள்.

பிறகு, 'ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், நமக்கு உதவியும் வெற்றியும் கிடைத்ததா?' என்று கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், 'வெற்றி மற்றும் உதவியின் அர்த்தத்தை இறைவனும் அவனது தூதரும் நம்மை விட நன்கு அறிவார்கள்' என்று கூறினார்கள். ஆனால், இந்த பதிலால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்குத் திருப்தி ஏற்படவில்லை. அவர்கள் அதே பதற்றமடைந்த நிலையில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் சென்றார்கள். மேலும், 'அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நாம் மக்காவை வலம் வந்தவாறு அதில் நுழைவோம் என்று இறைவன் நம்மிடம் வாக்குறுதி வழங்கவில்லையா?' என்று கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், 'ஆம்' என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், ‘நாம் இறைவனது ஜமாஅத் இல்லையா? இறைவன் நம்மிடம் வெற்றி மற்றும் உதவிக்கான வாக்குறுதி அளிக்கவில்லையா?’ என்று கேட்டார்கள். அன்னார், ‘அளித்திருந்தான்’ என்று கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், ‘அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நாம் உம்ரா செய்தோமா?’ என்று கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், ‘நாம் இந்த வருடமே உம்ரா செய்வோம் என்று இறைவன் எப்போது கூறினான்? இந்த வருடம் உம்ரா நடைபெறும் என்று நான்தான் கருதினேன். இறைவன் எதனையும் குறிப்பிட்டுக் கூறவில்லை’ என்று கூறினார்கள். அதற்கு அவர்கள், ‘பிறகு, வெற்றி மற்றும் உதவிக்கான வாக்குறுதியின் பொருள் என்ன?’ என்று கேட்டார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், ‘இறைவனது உதவி நிச்சயம் கிடைக்கும். அவன் அளித்த வாக்குறுதி எந்நிலையிலும் நிறைவேறும்’ என்று கூறினார்கள். இவ்வாறாக, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் வழங்கிய அதே பதிலைத்தான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களும் வழங்கினார்கள்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பிற மதத்தவர்களையும் அதிகம் கவனத்தில் கொண்டிருந்தார்கள். ஒருமுறை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் முன்னிலையில் ஒரு யூதர், ‘மூஸாவுக்கு அனைத்து நபிமார்களை விடவும் மேன்மையை வழங்கிய இறைவன் மீது நான் ஆணையிடுகிறேன்’ என்று கூறிவிட்டார். இதனால் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அவரைக் கன்னத்தில் அறைந்து விட்டார்கள். நபியே கரீம் (ஸல்) அவர்களுக்கு இந்த சம்பவத்தைப் பற்றிய தகவல் கிடைத்த போது, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை அதட்டினார்கள். மேலும், ‘இவ்வாறு ஏன் செய்தீர்கள்? யூதருக்கு அவர் விரும்பிய கொள்கையைக் கொண்டிருக்கும் உரிமை இருக்கிறது. அதாவது, தனது கொள்கைக்கு ஏற்ப தான் விரும்பியதை அவர் பேசலாம்’ என்று கூறினார்கள்.

**ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடனான ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களது அன்பு மற்றும் நேசத்தை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** மக்காவிலிருந்து மதீனா ஹிஜ்ரத் செய்த போதும், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வஃபாத்தின் போதும், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடனான ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களது தொடர்பு, நேசத்தின் தொடர்பாக இருந்தது.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு அதிகாரம் அந்நஸ்ர் இறங்கியது. அதில் அன்னாரது மரணத்தைப் பற்றிய மறைவான செய்தியும் இருந்தது. அப்போது அன்னார் சஹாபிகளை நோக்கி, ‘அல்லாஹுதஆலா தனது ஒர் அடியாருக்குத் தனது தோழமை மற்றும் உலக முன்னேற்றம் ஆகியவற்றில் ஒன்றுக்கு அனுமதி அளித்துள்ளான். நான் இறைவனது தோழமைக்கு முன்னுரிமை அளித்தேன் என்று கூறினார்கள். அனைத்து சஹாபிகளும் இதனால் மகிழ்ச்சி அடைந்தார்கள். ஆனால், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தேம்பித் தேம்பி அழுதார்கள். அன்னார் நிம்மதியற்று அழத்தொடங்கினார்கள். மேலும், ‘அல்லாஹ்வின் தூதர் அவர்களே! எங்களது தாய் தந்தையர், குழந்தைகள் அனைவரும் தங்கள் மீது அர்ப்பணமாகட்டும்! தங்களுக்காக நாங்கள் அனைத்து விஷயங்களையும் தியாகம் செய்யத் தயாராக இருக்கிறோம்’ என்று கூறினார்கள்.

இவ்வாறாக, எவ்வாறு ஒரு நேசத்திற்குரியவர் நோய்வாய்ப்பட்டால் ஆடு அறுத்து பலியிடப்படுகிறதோ அதே போன்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தமது மற்றும் தமது அனைத்து நேசத்திற்குரியவர்களின் தியாகத்தையும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்காக சமர்ப்பித்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் உட்பட அனைத்து சஹாபிகளும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அழுததனாலும், இவ்வாறு பேசியதனாலும் வியப்பில் இருந்தார்கள்.

அப்போது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், 'அபூபக்ர் எனக்கு எந்த அளவுக்கு நேசத்திற்குரியவர் என்றால், இறைவனைத் தவிர வேறு எவரையும் உற்ற நண்பராக ஆக்குவது ஆகுமானதாக இருந்திருந்தால், நான் அவரை உற்ற நண்பராக ஆக்கிக் கொண்டிருப்பேன். ஆயினும், தற்போதும் இவர் என்னுடைய நண்பராவார்' என்று கூறினார்கள். பிறகு, 'நான் கட்டளை இடுகிறேன். இன்றிலிருந்து அபூபக்ர் அவர்களது ஜன்னலைத் தவிர மஸ்ஜிதில் திறக்கின்ற அனைத்து மக்களது ஜன்னல்களும் மூடப்பட வேண்டும்' என்று கூறினார்கள்.

இவ்வாறாக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களுக்குத் தம்மீது இருந்த நேசத்தைப் பாராட்டினார்கள். ஏனென்றால், இந்த நேசம் முழுமையானதாக இருந்தது. அது அவர்களுக்கு, 'இந்த வெற்றி மற்றும் உதவியின் நற்செய்திக்குப் பின்னால் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களது வஃபாத்தின் செய்தி உள்ளது' என்பதையும் கூறிவிட்டது. அன்னார் தமது மற்றும் தமது நேசத்திற்குரியவர்களின் உயிரைப் பரிகாரமாக சமர்ப்பித்தார்கள்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** நபிமொழிகளில் வருகிறது. ஒருமுறை ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஆகியோருக்கு இடையில் ஒரு விஷயத்தில் முரண்பாடு ஏற்பட்டு விட்டது. மேலும் சண்டை அதிகமாகிவிடக் கூடாது எனக் கருதி ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அங்கிருந்து செல்ல முற்பட்டார்கள். அப்போது, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், 'எனது கூற்றிற்குப் பதில் தாருங்கள்' என்று ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களது மேலங்கியைப் பிடித்துக் கொண்டார்கள். இதனால் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களது மேலங்கி கிழிந்து விட்டது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடத்தில் சென்று தமது தவறை ஒப்புக் கொண்டார்கள். இதற்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், 'முழு உலகமும் என்னை மறுத்துக் கொண்டிருந்த சமயம் அபூபக்ர் என் மீது ஈமான் கொண்டார்கள். எல்லா வகையிலும் எனக்கு உதவி புரிந்தார்கள்' என்று கூறினார்கள்.

அதே நேரத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களும் வந்தடைந்தார்கள். மேலும், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களது கோபத்தைக் கண்டு (அதை) தமது தவறாக ஒப்புக்கொள்ள முனைந்தார்கள். இதுவே ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களது நேசமாக இருந்தது. அதாவது, அன்னாரால் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களது வேதனையைத் தாங்கிக் கொள்ள முடியாமல் இருந்தது.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களது வஃபாத்துக்குப் பிறகு சில கோத்திரங்கள் ஸ(க்)காத் கொடுக்க மறுத்து விட்ட போது, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அந்த மக்களுடன் போரிட எண்ணம் கொண்டார்கள். மென்மையை கடைபிடிக்குமாறு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஆலோசனை வழங்கினார்கள்.

ஆனால், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், 'ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களது கட்டளையை ரத்து செய்ய அபூ கஹாஃபாவின் மகனுக்கு என்ன தைரியம் இருக்கிறது? இம்மக்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களது காலத்தில் ஒரு கயிற்றை ஸ(க்)காத்தாக வழங்கி வந்திருந்தாலும், நான் அந்த கயிற்றையும் அவர்களிடமிருந்து வாங்கியே தீருவேன். இம்மக்கள் ஸ(க்)காத் கொடுக்காத வரை விடமாட்டேன்' என்று பதில் அளித்தார்கள்.

இதுதான் அன்பு மற்றும் நேசத்தின் உதாரணமாகும். அதாவது, இக்கட்டான தருவாயிலும் கூட, சஹாபா பெருமக்கள் சண்டையிடாமல் இருக்க ஆலோசனை வழங்கிக் கொண்டிருந்த நேரத்திலும் கூட, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களது கட்டளையை நிறைவேற்றுவதற்காக ஆயத்தமாகி விடுகிறார்கள். அவ்வாறே, உஸாமாவின் படையை நிறுத்த வேண்டும் என சஹாபிகள் கொடுத்த ஆலோசனையை மறுத்தவாறும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், 'எதிரி ஆற்றல் மிக்கவனாகி மதீனாவை வெற்றி பெற்றாலும் சரி! முஸ்லிம் பெண்களின் சடலங்களை நாய்கள் இழுத்துச் சென்றாலும் சரி! அப்போதும் கூட ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களால் தயார் செய்யப்பட்ட படையை என்னால் தடுத்து நிறுத்த முடியாது' என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் காலித் (ரலி) அவர்கள் ஈராக்கின் வெற்றிகளில் கிடைக்கப்பெற்ற ஒரு போர்வையைப் படை வீரர்களுடன் ஆலோசனை செய்த பிறகு, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு அன்பளிப்பாக அனுப்பி வைத்தார்கள். மேலும், 'இதைத் தாங்கள் எடுத்துக் கொள்ளுங்கள். இது தங்களுக்கான அன்பளிப்பாகும்' என்று எழுதினார்கள். ஆனால், அன்னார் அதை வாங்க மறுத்து விட்டார்கள்; தமது உறவினர்களுக்கும் வழங்கவில்லை. மாறாக, அதனை ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்களுக்கு வழங்கி விட்டார்கள்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:* எஞ்சியவை இன்ஷா அல்லாஹ் இனிவரும் நாட்களில் எடுத்துரைக்கப்படும்.

*ஜுமுஆ பேருரையின் இறுதியில், ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இரண்டு மர்ஹூம்களைப் பற்றிய நற்குறிப்பை எடுத்துரைத்தார்கள். அவர்களுள் முதலாமவர், தஹ்ரீக்கே ஜதீதின் ஸராஅத் துறையின் வக்கீலாக இருந்த* ***மதிப்பிற்குரிய ஸமீவுல்லாஹ் ஸியால் சாஹிப்*** *அவர்கள் ஆவார்கள். இரண்டாவது குறிப்பு, வக்ஃபே ஜதீதின் முஅல்லிம் அலீ அஹ்மது சாஹிப் மர்ஹூம் அவர்களது துணைவியார்* ***மதிப்பிற்குரிய ஸித்தீக்கா பேகம் சாஹிபா*** *அவர்களுடையது.*

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இரண்டு மர்ஹூம்களின் ஜனாஸா காயிப் தொழுகையைத் தொழ வைப்பதாக அறிவிப்பும் செய்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا

مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ

وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ

وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி சுல்தான் மைதீன்)**